DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 15/2019

List of Witness : Lw3

Prosecution Witness : PW4

| பெயர்: | பெருமாள்சாமி | ஜாதி: | |
|---|---|---|---|
| தந்தை / கணவர் பெயர் : | ராமசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 04/03/2025

**(எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் சொரக்காய்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஹோட்டல் மற்றும் டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு தேதி சரியாக ஞாபகம் இல்லை. ராஜேந்திரன் என்பவருக்கும் வேலுச்சாமி என்பவருக்கும் சண்டை நடந்ததாக என்னை கூப்பிட்டார்கள். நான் சென்று பார்த்தேன். சண்டை முடிந்த பின்பு தான் சென்று பார்த்தேன். இருவரும் சண்டை போட்டதாக சொன்னார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை :**

ஆஜர் எதிரி எனக்கு தெரியுமா என்றால் அவர் எனது பக்கத்து தோட்டத்துக்காரர் ஆவார். கடந்த 02.10.2008 ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் வேலுச்சாமி என்பவர் இரண்டு மாடுகள் மற்றும் 2 வெள்ள ஆட்டு குட்டிகள் மேய்ச்சலுக்காக ஒட்டன்சத்திரம் டூ பாச்சலூர் செல்லும் சாலை ஓரத்தில் மேய்த்துக் கொண்டிருந்தபோது வெள்ள ஆட்டு குட்டிகள் ஆஜர் எதிரி ராஜேந்திரன் என்பவர் தோட்டத்திற்கு சென்றுவிட்டதால் ஆஜர் எதிரி ராஜேந்திரன் வேலுச்சாமியை தகாத வார்த்தைகளால் பேசி கீழே தள்ளிவிட்டார் என்றும், காலால் ஏறி மிதித்து செருப்பால் அடித்தார் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அதனால் வேலுச்சாமிக்கு வலது தோள்பட்டை வயிறு, இரண்டு

கால்கள் ஆகியவற்றில் ஊமைக் காயங்கள் ஏற்பட்டது என்றும், நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த சின்னத்துரை என்பவரும் வேலுச்சாமியின் மகன் பாலகிருஷ்ணனுக்கு தகவல் சொல்லி அவர் வந்தவுடன் வேலுச்சாமியை பாலகிருஷ்ணன் ஒட்டன்ச்சத்திரம் அரசு மருத்தவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றும், சம்பவம் தொடர்பாக பாலகிருஷ்ணன் ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்திற்கு புகார் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.03.04 17:30:50 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 04/03/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 15/2019

List of Witness : Lw6

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | நாகராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கோபால்முனியன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 04/03/2025

**(எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் ஒட்டன்சத்திரம் கோட்டைவழியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை :**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் அவர் எனது ஊர்க்காரர். கடந்த 05.10.2018 ஆம் தேதி 11.00 மணிக்கு நானும் முனியாண்டி என்பவரும் ராஜேந்திரன் தோட்டம் அருகே நின்று கொண்டிருந்த போது ஒட்டன்சத்திரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற எண்.562/2018 வழக்கின் சம்பவ இடத்தை எங்கள் இருவர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார் என்றும் அதில் நானும் முனியாண்டியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S KABALEESWARAN
Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.03.04 17:30:58 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 04/03/2025